முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்தஇந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 08 திகதி முதல்

சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 திகதி வரை

(24.07.2022 ஞாயிறு முதல் 31.07.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானத்தலைவனே முருகா
ஞானிகளை படைக்கும் வேலவா
ஞானபூமிதனை உருவாக்கிட
ஞானமாக ஞானதேசிகனாக புவியில்
2. புவியில் அருளும் கந்தா உமைபோற்றி
புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
வகைபட சுபகிருது நள்ளித்திங்கள்
வழுத்திட அட்டமதிகதி மேல் மூவைதிகதி வரை
3. வரை நடக்கும் நிகழ்வாகவே
வருங்கால பலன் குறித்த ஆசி
உரைத்திடுவேன் அகத்திய மகரிஷியும்
உயர்வான நிலைகள்தனை அடைய
4. அடைய நல்பாதுகாப்பைபெற
அவசியம் இந்திய தமிழக மக்கள்
தடையின்றி சன்மார்க்கநெறி
தவராஜன் தருமநெறி ஏற்று
5. ஏற்று வருதல் வேண்டுமினி
ஏற்றால் தான் நல்லதலைமையும்
ஆற்றல்பட மக்கள் சேவையில்
ஆபத்தில்லா ஆளுமையாகவும்
6. ஆகவுமே இந்தியா தமிழகம்
ஆளுமையில் கருணை கூடி
வகையான வாழ்வாதாரம் வழி
வஞ்சம் சூழ்ச்சி வறுமைபற்றா வண்ணம்
7. வண்ணமுடன் தலைமைகள் சிறந்து
வளர்ச்சி நிலையாக மாறும்
எண்ணம் தூய்மை தயவில்லா
எந்தவித பேரமைப்பு என்றபோதும்
8. என்றபோதும் அவையெலாம் நசிந்து
இருக்குமிடம் தெரியா போகநேரும்
நன்றிலா வழிகளில் சேர்த்த
நாணயம் பதவி புகழை இழந்து

9. இழந்துமே சிறுமை கண்டு
இறைநிந்தனைக்கு ஆளாகநேரும்
வளர்ந்த வளராத அமைப்புகளும்
வணங்கி மக்கள் சேவையில்

10. சேவையில் தயவாய் நடக்கும்
செயல்பாட்டுக்கு வந்தால்தான்
அவனியில் தலைமை சிறந்து
ஆற்றல்பட இந்தியாதமிழகம் வளர்ச்சிகாணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஆடி மாதம் 8ம் நாள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 15ம் நாள் 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

ஞானத்தின் தலைவனே முருகப்பெருமானே. ஞானிகளை உருவாக்கும் ஞானபண்டிதனே வேலவனே முருகா இவ்வுலகினில் ஞானபூமியை உருவாக்கிட வேண்டியே இவ்வுலகின் ஞானமாக ஞானதேசிகனாக தோன்றி மக்களுக்கு அருள் செய்து காக்கின்ற கந்த வேலனே எங்கள் தலைவனே முருகா உம்மை போற்றி வணங்கியே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஆடி மாதம் 8ம் நாள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஆடி மாதம் 15ம் நாள் 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்கள் உயர்வான நிலையை அடைய வேண்டுமாயின், பாதுகாப்பான வாழ்வை பெற வேண்டுமாயின் அவசியம் தயவே வடிவான சன்மார்க்க நெறியினை ஏற்க வேண்டும். அரங்க மகான் கூறும் சன்மார்க்க நெறியினை கொண்ட தரும நெறியினை ஏற்று கடைப்பிடிக்க வேண்டுமப்பா. இதுவரை கடைப்பிடிக்காவிடினும் இனிமேலாகினும் உயிர்கொலை தவிர்த்து புலால் மறுத்து சுத்த சன்மார்க்க நெறியினை ஏற்க வேண்டுமப்பா. சன்மார்க்க நெறியினை மக்கள் கடைப்பிடித்தால்தான் மக்களை வழிநடத்தும் தலைவர்கள் நல்ல தலைவர்களாக அமைவார்கள் நல்லாட்சியையும் அவர்களால் தரமுடியுமப்பா.

மக்கள் சன்மார்க்க நெறி நிற்க இந்தியா தமிழகம் ஆட்சி முறையில் கருணை மிகுந்து காணப்படும் மக்களின் வாழ்வாதாரம் பெருகிடும். மக்களுக்கு வஞ்சம் சூழ்ச்சி வறுமை உண்டாகாமல் வாழ்வாதாரம் பெருகும். தலைமைகள் வஞ்சம் சூழ்ச்சி இல்லாதவர்களாக ஆகி சிறப்பான தலைமைகளாக ஆகி நாட்டின் முன்னேற்றம் விரைந்து உருவாகும்.

பெரியபெரிய அமைப்புகள் உண்டாகி இருந்த போதும் அவர்களது எண்ணத்தில் தூய்மையும் தயவும் இல்லையெனில் அந்த அமைப்புகள் எல்லாம் தானே நசிவடையும் இருக்கும் இடம் தெரியாமல் போக நேரிடும். நேர்மையற்ற வழியில் அந்த அமைப்புகள் சார்ந்தவர்கள் சேர்த்த நாணயம், பதவிகள், புகழையும் இழந்து கீழ் நிலையை அடைந்து கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமப்பா.

வளர்ந்த அமைப்புகள், வளராத அமைப்புகள் என எந்த அமைப்புகளாயினும் அவை எல்லாம் பாவ புண்ணியத்தின் மீது நம்பிக்கை வைத்து கடவுள் நம்பிக்கை கொண்டு கடவுளை வணங்கி மக்கள் சேவையில் தயவுடன் நடந்து நல்ல செயல்களை மக்களுக்கு தொண்டுகளாக செய்து

வந்தால்தான் அந்தந்த அமைப்புகளின் தலைமை சிறந்து விளங்கி ஆற்றல் பெருகி இந்தியா தமிழகம் வளர்ச்சி அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–